## தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் கலிங்கத்துப்பரணி

### ஆய்வு முன்னுரை

இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடியாகும். இலக்கியங்கள் பெரும்பாலும் மனித வாழ்க்கையின் பிம்பங்கள் ஆகும். இவை பண்டைய காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களது வாழ்க்கைச் சூழலையும் எடுத்துரைப்பதாக அமைகிறது. பண்டைய கால மனிதர்கள் வாழ்க்கையை அகம், புறம் எனப் பிரித்தனர். அகம் என்பது மனதின் எண்ணங்களை வெளிப்படுத்துகிறது. புறம் என்பது சமுதாயத்தில் வீரம், கொடை, வெற்றி ஆகிய அனைத்துசெயல்பாடுகளையும் குறிக்கிறது.

சங்ககாலத்தில் தோன்றிய தொன்மையான இலக்கணம் தொல்காப்பியம். இன்று கிடைக்கப்படும் முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியத்தை மூலநூலாகக் கொண்டே இன்று வரை பல இலக்கண நூல்கள் தோன்றியிருக்கின்றன. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் முதலிய அதிகாரங்களைக் கொண்டது. பொருளதிகாரம் தமிழரின் வாழ்க்கை முறையை அகம், புறம் எனப் பிரித்து எடுத்துரைக்கிறது. புறத்திணையில் வேந்தர்கள் போருக்கு முன்னரும், போருக்கு பின்பும் கடைபிடித்த நெறிமுறைகள் தொல்காப்பியத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தமிழில் பதினெண்மேல்கணக்கு, பதினெண்கீழ்க்கணக்கு, காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் போன்ற இலக்கியங்கள் நமது முன்னோர்களின் வாழ்வை எடுத்துரைக்கிறது. பண்டைய கால மக்கள் வீரத்தையே பெரிதென மதித்தனர். வீரம் நிறைந்தவரே சிறந்தவராகக் கருதப்பட்டனர். போரில் காயம்பட்ட நாளே சிறந்த நாளாகக் கருதி வாழ்ந்தனர்.

சிற்றிலக்கியங்கள், அரசர்கள், வள்ளல்கள், இறைவன் போன்றவர்களின் மேல் பாடப்பட்டத்தாகும். பிரபந்தங்களை சிற்றிலக்கியங்கள் என்பர். சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். உலா, தூது, பள்ளு, பரணி, அந்தாதி போன்ற இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் வகையைச் சார்ந்தது. இவை அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருள்களுள் ஏதேனும் இரண்டு பொருள்களைப் பெற்று வருவது ஆகும். பிற்காலத்தில் பல்வேறு சிற்றிலக்கிய நூல்கள் தோன்றின. அகம் மற்றும் புறம் பற்றியதாகவும் அமைந்தன. போரில் தோற்ற வேந்தரின் பெயரிலும்,மண்ணின் பெயரிலும் இலக்கியங்கள் தோன்றின. அவ்விலக்கியங்களே பரணி இலக்கியங்களாகத் தோன்றின. அவற்றுள் முதன்மையானதாகக் கருதப்படுவது கலிங்கத்துப்பரணி ஆகும். சோழ அரசரிடம் கலிங்க அரசன் தோற்றதை எண்ணிப்பாடுவது ஆகும். குலோத்துங்க சோழனின் அவைப் புலவரான செயம் கொண்டாரால் பாடப்பட்டது. சோழனின் வெற்றியினைப் பறைசாற்றுகிறது. தொல்காப்பியர் குறிப்பிட்டப் போர் முறைகளை கலிங்கப்போரில் கருணாகரன் பின்பற்றியமைக் குறித்து ஆய்வில் அறியமுடிகிறது. தொல்காப்பியமும், சிற்றிலக்கியமும் இரு வேறு

காலகட்டத்தைக் கொண்டது. இருப்பினும் சில போர் விதிமுறைகள் ஒரேவகையில் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியப் புறத்திணை மற்றும் கலிங்கத்துப்பரணி ஆகியவற்றில் சொல்லப்பட்ட போர்க் குறித்தும், போர் கருவிகள் குறித்தும், இன்றைய காலத்து போரின் தன்மை குறித்தும் ஆராய்வதாக ஆய்வானது அமைகிறது.

**ஆய்வுப் பொருள்**

**தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் கலிங்கத்துப்பரணி** என்னும் பொருண்மையில் ஆய்வுத் தலைப்பானது அமைந்துள்ளது.

**ஆய்வு நோக்கம்**

தொல்காப்பியம், மக்களின் அகப்புற வாழ்க்கைக்கான இலக்கணத்தை எடுத்துரைக்கிறது. பிற்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியமான கலிங்கத்துப்பரணி புறஇலக்கணம் வரையறுத்தப் போர் முறைகளை விளக்குகிறது. இந்த இரு நூல்களிலும் கூறப்பட்ட போர் முறையை ஆராய்தலும், அறிதலும் ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

**கருதுகோள்**

பரணி இலக்கியமான கலிங்கத்துப்பரணி சோழருக்கும், கலிங்கருக்கும் இடையேயான போரினைக் கூறுவதாக அமைகிறது. கலிங்கப்போர் முறைகள், தொல்காப்பியப் புறத்திணை மரபுகளோடு பொருந்தி உள்ளதை எடுத்துரைப்பதே ஆய்வின் கருதுகோளாகும்.

**ஆய்வு எல்லை**

தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள புறத்திணையியலும் (30 நூற்பாக்கள்), சிற்றிலக்கிய நூலானகலிங்கத்துப்பரணியும் (599 தாழிசைகள்) ஆய்வு எல்லைகளாக அமைகின்றன.

**ஆய்வு ஆதாரங்கள்**

**தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் கலிங்கத்துப்பரணி** என்னும் ஆய்விற்குத் தொல்காப்பியமும், கலிங்கத்துப்பரணியும் முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன.

தொல்காப்பியம், கலிங்கத்துப்பரணி நூல்கள் சார்ந்த ஆய்வுக் கோவைகள், திறனாய்வு நூல்கள், அகராதிகள், நிகண்டுகள் மற்றும் ஆய்வேடுகள் போன்றவை இவ்வாய்விற்குத் துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

**ஆய்வு அணுகுமுறை**

சோழர்களின் வரலாற்றுச் செய்திகளைக் கூறுவதால் வரலாற்று முறை அணுகுமுறையும், தொல்காப்பியப் புறத்திணைகளையும் கலிங்கத்துப்பரணியையும் விளக்கிக் கூறுவதால்விளக்கமுறை அணுகுமுறையும், கலிங்கத்துப்பரணியில் புறத்திணைகளைப் பகுத்துக் கூறுவதால் பகுப்பாய்வு அணுகுமுறையும், புறத்திணைகளை ஒப்பிட்டுக் கூறுவதால் ஒப்பிட்டு அணுகுமுறையும் கையாளப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பயன்**

அக்கால போர் முறைகளை இன்றைய சமூகத்திற்கு எடுத்துக்காட்டுவதே ஆய்வின் பயனாக அமைகின்றது.

**ஆய்வு முன்னோடிகள்**

**நூல்கள்:**

கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி – ந. சுப்புரெட்டியார்

தொல்காப்பியப் புறத்திணையியல் உரை வளம் - க. வெள்ளைவாரணனார்

கலிங்கத்துப்பரணியும் போர்க்காட்சிகளும் - முனைவர். கோ. சுரேஷ்

**ஆய்வுகள்:**

தொல்காப்பிய வழி கலிங்கத்துப் பரணி - ஓர் ஒப்பாய்வு – செவியர் ஜான் - 2012 – மெட்ராஸ் பல்கலைக்கழகம்.

**ஆய்வுக் கட்டுரைகள்**

கலிங்கத்துப்பரணியில் களச்சிறப்பு – முனைவர் பட்ட ஆய்வாளர் - ந. அகிலா

தொல்காப்பியம் காட்டும் பண்டையக் காலப் போர் முறைகள் (புறத்திணையியலும் சமுதாயமும்) – முனைவா. பா. பிரபு

ந. சுப்புரெட்டியார் அவர்களுடைய ‘கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி’ என்னும் நூலில் கலிங்கத்துப்பரணி முழுமையும் ஆய்வு செய்து கூறப்பட்டுள்ளது. கலிங்கத்துப்பரணியில் இடம்பெற்றிருக்கும் இலக்கிய உத்திகள், போாக்களக் காட்சிகள், பேய்கள் உலகம், முதலாம்

குலோத்துங்க சோழன், அனந்தவர்மன் ஆகியோரின் சிறப்புக்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், கலிங்கத்துப்பரணி நூலின் சிறப்புகளும் ஆய்வு செய்யப்பட்டு கூறப்பட்டுள்ளது.

தொல்காப்பியப் புறத்திணையியல் உரை வளம் என்ற வெள்ளைவாரணனாரின் உரையில் தொல்காப்பியப் புறத்திணை நூற்பாக்களுக்கான உரைகள் சிறந்த முறையில் கொடுக்கப்பட்டுள்ளன. புறத்திணைப் பற்றிய விளக்கமும், புறம் பற்றியச் செய்திகளும் கொடுக்கப்பட்டுள்ளது.

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகிய பரணி இலக்கியத்தைப் பற்றியும், பரணி இலக்கியத்தின் முதல் நூலாகிய கலிங்கத்துப் பரணியில் காணப்படுகின்ற போர் நிகழ்வுகளை எடுத்துரைப்பதாகவும்,'கலிங்கத்துப்பரணியும் போர்க்களமும்' என்ற இவ்வாய்வு நூல் அமைகிறது. பரணி நட்சத்திரத்தின் சிறப்பையும், காளிதேவிக்கு உரிய பரணி நட்சத்திரத்தில் போர்கள் துவங்குவதையும், காளிதேவியைச் சிறப்பிப்பதையும், தலைமாலை அணிதல், பிற உயிர்களைப் பலியிடல், நரபலி போன்றவற்றை ஆய்வதாகவும் இவ்வாய்வு அமைகின்றது. சாளுக்கிய குலத் தோன்றலும், சோழர்குல மகள் வயிற்றுப் பிள்ளையும், சோழ மன்னனுமாகிய முதலாம் குலோத்துங்கனுக்கு அடங்கித் திரை செலுத்தாத கலிங்க நாட்டின் மீது தனது படைத் தளபதியாகிய கருணாகரத் தொண்டைமானைப் படையெடுக்கச் செய்து கலிங்க மன்னனைத் தோற்கடித்து அவனைப் பிடித்து வருமாறு ஆணையிட்டான். மன்னனது ஆணைப்படி படையெடுத்துச் சென்று அவனைத் தோற்கடித்து அம்மன்னனது யானைகளையும், குதிரைகளையும், வீரர்களையும், இளம்பெண்களையும் கைப்பற்றி அம்மன்னனது பெருஞ் செல்வத்தையும் கொள்ளையிட்டு வந்து மன்னனிடம் சமர்ப்பித்ததையும் குறிப்படுகிறது இவ்வாய்வு. தேவர் – அசுரர் போரைக் காட்டிலும், இராமன்-இராவணன் போரைக் காட்டிலும், மகாபாரதப் போரைக் காட்டிலும் இப்போர் புகழ் பெற்றதாக கூறுவதாக இவ்வாய்வு நூல் முடிகிறது.

தொல்காப்பிய வழி 'கலிங்கத்துப் பரணி - ஓர் ஒப்பாய்வு' என்றஆய்வில் தொல்காப்பிய அகத்திணை மற்றும் புறத்திணையோடு கலிங்கத்துப்பரணியினை ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தொல்காப்பியர் கூறிய இலக்கணத்தோடு மட்டுமல்லாது புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் இலக்கணத்தோடும் கலிங்கத்துப்பரணியினை ஒப்பாய்வு செய்துள்ளார் ஆய்வாளர். மேலும், இவ்வாய்வில் ஒப்பாய்வு மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முனைவர் பட்ட ஆய்வாளரான ந. அகிலா என்பவரின் ஆய்வுக்கட்டுரையில் கலிங்கத்துப்பரணியில் அமைக்கப்பட்டுள்ள களம் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. களம் பற்றிய விளக்கம், களச்சிறப்பு, கலிகங்கத்துப்பரணியில் களச்சிறப்பு, காளி களம் கண்டு வியத்தல், குருதிக்கடலில் யானைகள், அம்பை நிணமென நினைத்த பருந்து, கருங்காகம் வெண்காகமான காட்சி, கருமேகம் செம்மேகமான காட்சி, தாமரைக்குளமான போர்க்களம், குருத்திக்கடல், வீரர்

முகமலர்ந்து காணப்படல், பருந்தும் கழுகும் துன்புறுதல், வீரர்களின் மற மாண்பு, அம்மானை போன்று வீரர் தலை கொள்ளுதல் போன்ற களம் சார்ந்த பலத் தலைப்புகளின் கீழ் ஆய்வுக்கட்டுரையினை அமைத்துள்ளார்.

தொல்காப்பியம் காட்டும் பண்டையக் காலப் போர் முறைகள் (புறத்திணையியலும் சமுதாயமும்) என்ற ஆய்வுக்கட்டுரையில் சங்ககாலத்தில் இருந்த போர் முறைகள் பற்றியும், போர்முறைக்கான அடையாளங்கள் பற்றியும், ஐவகை நிலத்திற்கான போரும், போருக்கானக் காரணங்களைப் பற்றியும் முனைவர். பா. பிரபு அவர்கள் வரையறுத்துக் கூறியுள்ளார்.

இவ்வகையில் தொல்காப்பியப் புறத்திணையியல் வழியாகக் கலிங்கத்துப்பரணியில் உள்ள போர்முறைகளை ஒப்பீட்டு அதனோடு, போருக்கானக் காரணங்கள், போரில் பின்பற்றப்பட்ட அறங்கள் போன்றவற்றைக் கூறி அதனோடு இன்றைய போர்ச்சூழலையும், அதன் விளைவுகளையும் மையப்படுத்தி இதுவரை ஆய்வு மேற்கொள்ளப் பெறாத நிலையில் ‘தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் கலிங்கத்துப்பரணி’ என்னும் இவ்வாய்வானது முதல் ஆய்வாக அமைகின்றது.

**ஆய்வுப் பகுப்பு**

**தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் கலிங்கத்துப்பரணி** என்னும் ஆய்வில் முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

- **இயல் - 1 – கலிங்கத்துப்பரணியும் சோழர் வரலாறும்**
- **இயல் - 2 – தொல்காப்பியப் புறத்திணை மரபுகள்**
- **இயல் - 3 – போர் நெறிமுறைகளும் போர்ப்படைகளும்**
- **இயல் - 4 – போரும் போர்க்களமும்**

**இயல் - ஒன்று - கலிங்கத்துப்பரணியும் சோழர் வரலாறும்**

சிற்றிலக்கியமும், கலிங்கத்துப்பரணியும் என்னும் முதல் இயல் சிற்றிலக்கியம், அதன் வகைகள், சிற்றிலக்கியத்தின் பகுப்பு, பரணி இலக்கியம், அதன் வகைகள், கலிங்கத்துப்பரணி, சோழர் வரலாறு, குலோத்துங்க சோழனின் வாழ்க்கை முறை ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையில் அமைகிறது.

**இயல் - இரண்டு - தொல்காப்பியப் புறத்திணை மரபுகள்**

தொல்காப்பியப் புறத்திணை மரபுகள் என்னும் இரண்டாம் இயலானது. தொல்காப்பியர் குறிப்பிட்ட புறத்திணையிலில் வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகள் மற்றும் துறைகளில் பின்பற்றப்பட்ட மரபுகளை ஆய்வதாகஅமைகிறது.

**இயல் - மூன்று - போர் நெறிமுறைகளும் போர்ப்படைகளும்**

போர் நெறிமுறைகளும், போர்ப் படைகளும் என்னும் மூன்றாம் இயலில் அன்றைய காலத்தில் இன்றியமையாத போர் குறித்தும், போருக்கென வகுக்கப்பட்ட நெறிமுறைகயையும், போருக்காகத்தயார்செய்யப்பட்ட படைகளையும், போர்க்களம் புகுந்தனர். பல்வேறு போர்க் கருவிகளை தனது நாட்டிலேயே தயார் செய்து போரிட்டனர் என்பதை இவ்வியலின் மூலம் அறியமுடிகிறது.

**இயல் - நான்கு - போரும் போர்க்களமும்**

போரும் போர்க்களமும் என்னும் நான்காம் இயலில் போருக்கு முன் ஆயத்த நிலைகள், நிமித்தம் பார்த்துப் போர்செய்தல், போரில் நான்கு வகை படைக்கலன் நிலை, போர்களத்தில் மகளிர் செயல், போரில் காளிதேவி மற்றும் பேய்களின் உலகம், போரில் சிறுவர்களின் நிலை ஆகியவற்றை ஆராயும் நோக்கில் இவ்வியலானது அமைகிறது.

**முடிவுரை**

**‘தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் கலிங்கத்துப்பரணி’**என்னும் ஆய்வின் முடிவில் ஆய்வில் கண்டறியப்பட்ட அனைத்தும் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இயலின் முடிவிலும் தொகுக்கப்பட்ட தொகுப்புரைகள் முடிவுரையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

**‘தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் கலிங்கத்துப்பரணி’**எனும் ஆய்வில் துணையாக நின்ற நூல்கள் முதன்மைச் சான்றாதாரங்களாகவும், துணைமைச் சான்றாதாரங்களாகவும் அகர வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**பின்னிணைப்பு**

ஆய்விற்கு உறுதுணையாக அமைந்தவை பின்னிணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.